மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகின்றேன்.

மறுப்போரே இல்லை.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் (20—4—1993) நாளை காலை 10-00 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-22 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

5. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

173. சென்னை-60, மாதவரம், தமிழ்நாடு மாநில கிளையைச் சேர்ந்த தேசிய பார்வையற்றோர் சங்கத்தினால் வாங்கப்படும் கருவிகள் மற்றும் தளவாடச் சாமான்களுக்காகச் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரியிலிருந்து விலக்களித்தல் குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 2—11—1992 ஆம் நாளிட்ட 48 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

174. 9—7—1992 ஆம் நாள் முதல் திருமதி பா. வளர்மதி அவர்களை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத் தலைவியாக நியமனம் செய்தமைக் குறித்து வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 9—7—1992 ஆம் நாளிட்ட 423 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1971ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

1993 ஏப்ரல் 19]

175. 1990-91ஆம் ஆண்டிற்கான தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகத்தின் பதினாறாவது ஆண்டறிக்கை [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

176. 1991-92ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் ஆண்டுக் கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை [1971ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 41 பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.] (ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

175. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் (பதினாறாவது பட்டியல்) (வரிசை எண். 1 முதல் 50 வரை).

176. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் (பதினேழாவது பட்டியல் (வரிசை எண். 1 முதல் 50 வரை).